மலர் : 10 தை இதழ் : 9

சிறுவர் மாத இதழ்

வெற்றிமணி

1973

அமரர் ராஜாஜி அவர்கள்

வாசக நேயர்கட்கு
எமது பொங்கல் வாழ்த்துக்கள்

கௌரவ ஆசிரியர் :
குரும்பசிட்டி மு. கி. சுப்பிரமணியம்

1-1-73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை சதம் 35

கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

வெற்றிமணி

ஆலோசகர் குழு

இரசிகமணி கனக. செந்திநாதன்

வி. கந்தவனம் B. A.

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

காரை. செ. சுந்தரம்பிள்ளை

—※—

கடந்த பத்து ஆண்டுகளாக
வெளிவரும்
ஈழத்துச் சிறுவர் மாதப்
பத்திரிகை.

விளம்பர விகிதம்

வெளி அட்டை	ரூபா	75-00
உள் அட்டை	ரூபா	60-00
முதற் பக்கம்	ரூபா	50-00
உட் பக்கம்	ரூபா	40-00

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு.
விபரங்களுக்கு எமக்கு எழுதுக.

வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

இலங்கை	ரூபா	5-00
இந்தியா	ரூபா	6-00
மலாயா	$	5-00

வெற்றிமணி

253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் 10	1-1-73 திங்கட்கிழமை	இதழ் 9

உலக மகா மேதை ராஜாஜி

இந்தியாவின் முதுபெரும் இராசதந்திரியும், மூதறிஞரும் ஞானியுமான சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் யேசுநாதர் பிறந்த நாளாகிய டிசம்பர் மாதம் 25 ஆந் திகதி மாலை 5-44 மணிக்கு தனது 94 ஆவது வதியல் காலமானர்.

1878 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி பிறந்த இவர் தனது 20 ஆம் வயதில் திருமணஞ் செய்தார். காந்தி அடிகளைச் சந்தித்து அவரது சிறந்த தொண்டினால் கவரப்பட்ட ராஜாஜி தனது வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு அரசியலில் பிரவேசித்தார். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, ஹரிசன மக்களின் நல்வாழ்வு ஆகியவற்றில் இவரது சேவை பிரகாசித்தது. சுதந்திரப் போராட்டத்தின்போது பலமுறை சிறை சென்றார். காந்திமகானே ஒருமுறை "என் உள்ளத்தை உள்ளபடி உணர்ந்தவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

1927 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் பொதுக் காரியதரிசியாகத் தெரிவுசெய்யப்பட்டார். சென்னை மாகாணத்தின் முதன் மந்திரியாக இருந்தபோது ஆலயங்களைக் ஹரிசனங்களுக்குத் திறந்துவைத்தார். இந்திய மத்திய அரசாங்கத்தில் வர்த்தக அமைச்சராக இருந்த இவர் 1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் மேற்கு வங்காள கவர்னராகப் பதவி ஏற்றார். கவர்னர் ஜெனரலாகப் பணிபுரிந்த மவுண்ட்பேட்டன் பிரபு விலக, இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பதவிவகிக்க வாய்ப்புப் பெற்ற முதலாவது இந்தியரும் ராஜாஜியவர்களே. 26-1-52இல் இந்தியா குடியரசு நாடாகியதும் ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியை விட்டு விலகி மத்திய அமைச்சில் இலாகாப் பொறுப்பற்ற அமைச்சரானர். 1954 ஆம் ஆண்டு இவருக்கு இந்திய அரசின் உயர்ந்த விருதான 'பாரதரத்ன' பட்டம் வழங்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியில் 20 ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராயிருந்த இவர் அக்கட்சியிலிருந்தும் விலகி 1959 ஆம் ஆண்டு சுதந்திரக்கட்சியை ஆரம்பித்தார். அப்போது இவருக்கு வயது 80. 1967 இல் அண்ணை தலைமையிலான கூட்

டணி சென்னையில் ஆட்சியை நிறுவுவதற்கு இவரே மூலகாரண மாக இருந்தார். இவர் அரசியல் மேதை மட்டுமல்ல சிறந்த ஆத்மீக வழிகாட்டியும், இந்துமதத்தின் சிறப்பை விளக்கிவந்த சிந்தனையாளரும் ஆவர். தமிழ், ஆங்கில மொழிகளில் சிறந்த பேச்சாளராகவும் இருந்தார்.

ராஜாஜி மரணம் அடைவதன் முன்னர் கூறிய கடைசி வார்த்தை :— "நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்பது.

உலகின் பல பாகங்களிலிருந்தும் ராஜாஜியின் மரணம் குறித்து அனுதாபச் செய்திகளைப் பலர் அனுப்பினர். பல்வேறு நாட்டுத் தலைவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இவரின் மரணம் குறித்து இந்தியா பூராவும் ஏழுநாட்கள் துக்கம் அனுட்டிக்கப்படும் என மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி "நாம் ஒரு மாபெரும் மேதையை இழந்துவிட்டோம், அவரது ஆற்றலும் அதுவும் நிர்வாகத் திறமையும் அவசியம் ஏற்பட்டால் எந்தக் காரியத்தையும் சாதிக்கும் திறனும் அரசியல் துறையில் அவருக்குப் புகழை ஈட்டிக்கொடுத்தன. அவரது மறைவு எம்மைப் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது" என ராஜாஜியின்மறைவுபற்றிக் கருத்துத் தெரிவித்துக் கூறியுள்ளார்.

மூதறிஞர் ராஜாஜியின் மறைவு குறித்து பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:

"உலக மகா மேதையான ராஜாஜியும் மறைந்துவிட்டார். உயர் வொப்பில்லாத அறிவறிந்த மகான் ராஜாஜி. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மறைந்த ஆண்டு ராஜாஜி பிறந்த ஆண்டு. அண்மையில் நாவலரின் 93 ஆம் குருபூசை நடந்தது. அதே காலத்தில் ராஜாஜியின் 93 வயது பூர்த்தியாய் அடுத்த வயது ஆரம்பமானது. அவர் இன்று நம்மிடையே இல்லை. ராஜாஜியின் ஆத்மா மகாத்மாவை அடைந்து ஆத்ம சாந்தி எய்தி ஆனந்தமுறுவதாக"

— ஆசிரியர்

மாணவர்களே!

சுடச்சுட இதோ வெளிவந்துவிட்டது

"பௌதீகவியல் வரைவிலக்கணம்"

(For G. C. E. ordinary level Classes)

எழுதியவர் : ச. சுகதாசன் (நெல்லைதாசன்)

மலிவு விலை ரூபா 1-45 மட்டும்

(இது ஒரு கோமாளிப் பிரசுரம்)

(வர்த்தக நோக்குடையதன்று)

"உனக்காகத் திரும்பி வருவேன்"

— கவிதா —

என்னுடைய வேலையில் நான் எத்தனையோ வகையான மக்களைத் தேடிக் கண்டுபிடித்துள்ளேன் — காணமல்போன வாரிசு, ஓடிப்போன கணவன், கடன்காரர். சில ஆச்சரியமானவைகளே! அவற்றில் ஒன்றுதான் கீழே கொடுக்கப்போகும் கடிதத்தோடு ஆரம்பமாகின்றது.

அன்புடையீர்!

மியூரியலும் நானும் 1957ஆம் ஆண்டு விவாகமானோம். அதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவள் தன்னுடைய முதற் கணவனை கொரியாவில் இழந்தபடியால் அவர்களின் மகள், எட்டுவயதுச் சிறுமி குலோடியாவை ஓர் அனுதை இல்லத்தில் சேர்த்தாள். தனது ஒரே குழந்தையுடன் தொடர்புகொள்வதை இழந்ததையிட்டு அவள் மிகவும் வருந்துகின்றாள். அண்மையில் அவளுடைய மகளைக் கண்டுபிடிப்பதற்கு நான் முயற்சி எடுத்துள்ளேன். ஆனால் அவள் எங்கிருக்கிறாள் என்பதுபற்றிய தகவல் ஒன்றும் இல்லை.

ஸ்குயர் வீடியத்தில் தொடர்ந்து தனது மனைவி மகளை விட்டுப் பிரியும்போது கடைசியாகக் கூறிய வார்த்தையான — "இது ஒரு சொற்ப காலத்துக்குத்தான். என் கண்மணியே, நான் திரும்பி உனக்காக வருவேன்" — எழுதியிருந்தார். அதோடு குலோடியாவின் சிகையின் நிறத்தையும், நீலக் கண்களையும் பற்றியும்கூறி அதோடு அவளுக்கு இசையில் இருந்த ஈடுபாட்டையும் குறிப்பிட்டிருந்தார். அனுதையில்லத்திலிருந்து குலோடியாவைப்பற்றிய அறிக்கையில் அவள் இசைப்பயிற்சி பெறுவதைக் குறித்திருந்தனர். ஆனால் ஒரு ஆண்டிற்குப் பின் அவள் வேறு இடத்தில் வளர்ப்புப் பிள்ளையாகச் சென்றபின் அவளைப்பற்றிய செய்தி வருவது நின்றுவிட்டது. இப்போ பன்னிரண்டு ஆண்டுகள் மறைந்துவிட்டன.

நான் ஸ்குயரைச் சந்தித்தபோது அவருடைய அமைதியும் நேர்மையும் என்னைக் கவர்ந்தன. தன் மனைவி குலோடியாவைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறாளே அன்றி அவளுடைய வாழ்க்கையில் குறுக்கிட விரும்பவில்லையென்றும் இம் முயற்சியினால் பாரதூரமான செலவுகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்றும் கூறினர். "என் மனைவி துன்பப்படுவதை என்னால் சகிக்க முடியாது" என்று வருத்தத்துடன் கூறினர்.

இத்தகைய பண்பான ஒரு மனிதனுக்கு இல்லை என்று மறுக்க முடியாது. ஆனால் அதில் பிரச்சினைகள் பல இருந்தன. சட்டப்படி ஒரு குழந்தையை தத்து எடுத்தபின் சொந்தப் பெற்றோர்கள் கூட அப் பிள்ளையைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள முடியாது. மதிப்புக்குரிய எந்த நிறுவனமும் தத்து எடுத்தவர்களைப் பற்றியும் குழந்தையைப் பற்றியும் வெளியே கூறமாட்டாது. நீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தலத்திலும் தத்துவார்த்தக் குறிப்புக்களை சீல்பண்ணி மூடிவிடுவார்கள்.

உற்றிக்கா (Uttica) என்ற இடத்திற்குச் சென்று அனுதையில்ல அதிகாரிகளை விசாரித்தேன். அவர்கள் அளித்த பதில்களிலிருந்து குலோடியா எங்கோ வேலையில் இருக்கிறாள் என்பதை உணர முடிந்தது. அவள் வேலையில் இருக்கக்கூடும் என்ற சிந்தனை. ஏன் அவள் இசைமூலம் வேலை பெற்றிருக்கக்கூடாது என்ற கேள்வியைத் தூண்டியது. குலோடியா என்ற பெயருடைய இசைமூலம் பிரபல்யம் அடைந்த பெண்களைச் சந்திக்க முயன்றேன். முதலிரண்டு குலோடியாக்களைப் பார்த்து ஏமாற்றம் அடைந்த நான் மூன்றாவது குலோடியாவைச் சந்திக்கச் சென்றேன். அவள் கிளப் ஒன்றில் பாடுவதாக அறிந்து அவளைப் பார்க்க விரும்புவதாக ஒரு கடிதம் எழுதினேன். அடுத்தநாள் நான் அந்தக் கிளப்புக்குச் சென்றபோது அவள் பாடிக்கொண்டிருந்தாள். அழகான உருவத்தோடு சேர்ந்த இனிமையான குரல். அங்கிருந்தவர்கள் அவளின் இசையை மிகவும் இரசித்தனர். அவள் பாடல் முடிந்தபின் அவள் தங்கியிருந்த அறைக்குச் சென்றேன். என்னை நான் அறிமுகப்படுத்திய பொழுது அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. ''உங்களைச் சந்திப்பது மகிழ்ச்சி. எனது மனேஜர் உங்களுடைய கடிதத்தைப் படித்துக் காட்டினார். என்னால் வாசிக்க முடியாது, ஏனெனில் நான் கண் பார்வை அற்றவள்'' என்றாள். நான் ஒருகணம் திடுக்கிட்டேன். ''மன்னிக்கவும், எனக்குத் தெரியவில்லை'' என சொற்கள் தடுமாறின. ''பலருக்கு இதுபற்றித் தெரியாது. திரை இழுப்பதற்கு முன்பு என்னை மேடைக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள்'' என்ற அப்பெண் ''நான் ஏதும் சொல்லவேண்டுமா?'' என்றாள். இந்தப் பெண்ணை இருக்கக்கூடுமா என்ற சந்தேகத்தோடு நான் வந்த காரணத்தைக் கூறினேன். நான் கூறும்பொழுது அவளுடைய முகம் கடினமாக மாறியது; கசப்பான குரலில் ''ஆமாம் நான்தான் அந்தப் பெண். எட்டு வயதாக இருந்தபோது நான் பார்வையிழக்கப்போகிறேன் என்று அறிந்தும் என் தாயார் என்னை விட்டு நீங்கினாள்'' என்றாள். அவளுக்கு தன் தாயாரைப்பற்றியும் எங்கிருக்கிறாள் என்பதுவும் தெரியாது. அவள் அறிந்துகொள்ளவும் விரும்பவில்லை. தன்னுடைய வளர்ப்புப் பெற்றோர்களைப்பற்றி மிக அன்புடன் கூறினாள். தாயாரைச் சந்திப்பது பற்றிய என் வேண்டுகோளை அவள் முற்றாக மறுத்துவிட்டாள்.

குலோடியாவின் பார்வையீனத்தை நான் ஜோன் ஸ்துவரிடம் கூறியபோது அவர் மௌனமாக இருந்தார். எப்படியாவது தாயையும் மகளையும் சந்திக்கும்படி செய்யவேண்டுமென்று என்னைக் கெஞ்சிக் கேட்டார். ''உங்களுடைய மனைவிக்கு தன் மகள் பார்வை இழக்கிறாள் என்பது முன்பே தெரியுமா?'' என்று கேட்டேன். ஜோன் ஒருகணம் தயங்கியபின் ''உண்மைக்குப் பல வடிவங்கள் உண்டு. தயவுசெய்து முயற்சியைக் கைவிடவேண்டாம்'' என்றார்.

குலோடியாவின் மனத்தைத் திருப்ப அவளின் வளர்ப்புத் தாய் தந்தையர்களைச் சந்தித்தேன். குலோடியாவின் இதயத்தில் தாயார் மேலுள்ள வெறுப்பை நீக்கவேண்டுமென்றும், என் வேண்டுகோளையும் சமர்ப்பித்தேன். எனக்கு உதவுவதாக வாக்களித்தார்.

அடுத்தநாள் தொலைபேசியில் பேசியபோது குலோடியா ஆத்திரத்தால் படபடத்தாள். ''எனக்குத் தாயாருடைய உதவி மிக அவசரமான நேரத்தில் என்னை ஒரு சுமையாகக் கருதி கைகழுவி, நிர்கதியாக விட்ட அவரை என்னால் மன்னிக்க முடியுமா?'' என்று கேட்டாள். ''உமது தாயாரின் பக்கத்துக் கருத்தையும் கேட்டுப் பார்க்கலாம்'' என்றேன். நீண்ட மௌனத்திற்குப் பின் ''சரி, நான் மிக விரும்பும் என் வளர்ப்புப் பெற்றோர்களின் விருப்பத்திற்காக என் தாயாரைச் சந்திக்கின்றேன் ஒரேஒரு தடவைதான்! ஆனால் என் உள்ளத்தில் இருக்கும் கசப்பை ஒன்றுமே மாற்ற முடியாது'' என்றாள் நிதானமாக.

நான் தொலைபேசி மூலம் தாயும் மகளும் சந்திக்க ஏற்பாடு செய்தேன். அன்று குலோடியாவை அவளின் தாயாரிடம் அழைத்துச் சென்றபோது, அவளின் தயக்கத்தையும் பதட்டத்தையும் உணர முடிந்தது; ''என்னைத் தனிமையில் விட்டுச் செல்லவேண்டாம். தாயாருடன் பேசும்பொழுது நீங்களும் இருங்கள்'' என்றாள்.

அறைக்குள் நுழைந்தபோது ஒரு பெரிய நாற்காலியில் நீலக் கண்களையுடைய ஒரு பெண் இருந்தாள். நரைத்த சிகையில்லாவிட்டால் அப் பெண்ணை குலோடியாவின் சகோதரி என்றே நினைக்கத் தோன்றும். குலோடியா தடுமாறிக்கொண்டே மெதுவாக ''ஹலோ'' என்றாள். பல ஆண்டுகளாக இச் சந்தர்ப்பத்தில் என்ன பேசவேண்டும் என்று எண்ணியிருந்தும் அவை அனைத்தையும் மறந்துவிட்டேன். உன்னுடைய குரல் இப்பொழுதும் அன்று மாதிரியே ஒலிக்கின்றது'' என்றாள் அம்மாது.

''தயவு செய்து'' திணறினாள் குலோடியா.

''அருகே வா! நான் உன்னைப் பார்க்கவேண்டும்''

நான் குலோடியாவை அவள் தாயின் அண்மையில் விட்டேன். நீட்டிய கரங்கள் நான் நினைத்தமாதிரி அவளைத் தழுவிக்கொள்வதற்குப் பதிலாக மகளின் தோள்களைத் தீண்டின; பின் மெதுவாக முகத்தை நாடின; உணர்வுடைய விரல்கள் கன்னங்களையும் நெற்றியையும் சிகையையும் தொட்டுப் பார்த்தன. பின் மிக மெதுவான குரலில் ''நீ மிக அழகாக வளர்ந்துவிட்டாய்'' என்றாள்.

குலோடியாவின் கரம் மேலே உயர்ந்து தாயாரின் கரங்களைத் தீண்டியது.

''நீங்கள் ... ... உங்களாலும் பார்க்க முடியாதா?'' ''இல்லை மகளே! என்னாலும் பார்க்க முடியாது. ஆனால் நீ எங்கிருந்தாலும் என்னால் உணர்ந்துகொள்ள முடியும்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ என்ற குலோடியா விசும்பலுடன் இது எனக்கு முன்பே தெரிந்திருந்தால் ... ... அதுதான் நீங்கள் சொல்லியபடி திரும்ப வர முடியவில்லை. என்னை அனுதையில்லத்திலும் சேர்த்ததில் வியப்பில்லை. ஆனால், ஒருவருமே இதனைக் கூறவில்லையே என்றுள் கண்ணீர் அருவியாகப் பெருகி ஓட. என்னால் அங்கு நின்று அக்காட்சியைப் பார்க்க முடியவில்லை. அடுத்த அறைக்குச் சென்றேன். அங்கே ஜோன் ஸ்குயர் நின்று சாரளத்தினூடாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் வேதனை வழிந்தோடியது.

"எல்லாம் சரியாகிவிட்டது" என்றேன்.

"எதற்காக உங்கள் மனைவியின் பார்வையினத்தைப்பற்றிக் கூறவில்லை?" என்றேன்அடக்கமுடியாத ஆவலுடன். "அதனைக்கூற என் மனைவி விரும்பவில்லை. தன்மேல் கொண்ட இரக்கமே தன் மகள் தன்னைப் பார்க்கத் தூண்டியது என்ற நினைவையே அவளால் தாங்கிக்கொள்ள முடியாது" என்றார் அந்த உத்தமர்.

இன்றும் குலோடியா தன் வளர்ப்புப் பெற்றோருடன்தான் தங்கியிருக்கிறாள். ஆனால் தாயும் மகளும் அன்பினாலும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் உணர்வினாலும் ஒன்றுபட்டுவிட்டனர். அந்த அன்பும் அந்த உணர்வும்; விதவையும் பார்வையினமுமான ஒரு அன்னையை தன்னைப்போலப் பார்வையிழக்கும் நிலையிலிருந்த தன் குழந்தையை; தன்னால் கொடுக்க முடியாத பாதுகாப்பும் உதவியும் வேறு எங்கேயாவது கிடைக்கட்டும் என்ற பெரு நோக்கத்தோடு தியாகம்செய்யத் தூண்டின.

— ஆங்கிலக் கதையின் தொகுப்பு

ஆசிரியர் லீவு விண்ணப்பப் பத்திரம்

50 பத்திரம் கொண்ட பாட் (Pad) விலை ரூபா 2-00
100 பத்திரம் கொண்ட பாட் (Pad) விலை ரூபா 3-00
பார்சல் செலவு 50 சதம்

ஆசிரியர்கள் தங்களுக்குத் தேவையான தொகையைத் தயவுசெய்து உடனே அறிவிக்கவும். தேவைக்குத் தக்க தொகையை அச்சிட உதவியாக இருக்கும்.

சக்தி அச்சகம், 253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஐந்தாண்டுத் திட்டம்

வி. கந்தவனம், பீ. ஏ.

இலங்கையில் என்றுமில்லாத அளவுக்குச் சமூக பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது. மோசமுறும் அந்நியச் செலவாணி நிலையும் வேலையற்றோர் தொகைப் பெருக்கமும் இன்று வெகு சிக்கலான கட்டத்தினை அடைந்துள்ளன. தேசிய மொத்த அபிவிருத்திப் போக்கு, தொழிலின்மை, வருமான ஏற்றத் தாழ்வு, கொடுப்பனவு நிலுவை ஆகியவை தொடர்பாகப் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இப் பிரச்சினைகளை ஐந்து ஆண்டுகளுக்குள் நியாயமான அளவுக்குத் தீர்த்துவைத்தற் பொருட்டும் நெடுங்கால வளர்ச்சிக்குத் தக்க அத்திவாரமிடுதற் பொருட்டும் அரசாங்கம் கடந்த ஆண்டு ஓர் அபிவிருத்தித் திட்டத்தை வகுத்துள்ளது. இதுவே ஐந்தாண்டுத் திட்டமாகும்.

ஐந்தாண்டுத் திட்டம் நாட்டின் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்து, அவை தோன்றக் காரணமாகவிருந்த அமிசங்களைத் தேர்ந்து, அவற்றைத் தீர்க்கவல்ல நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து, அத் திட்டங்களைச் செயல்படுத்த முயல்கிறது.

இத் திட்டம் (1) பிரச்சினைகள், (2) நோக்கங்கள், (3) திட்டங்கள், (4) செயற்பாடு என்று நான்கு பிரதான பிரிவுகளை உடையது.

1. **பிரச்சினைகள்** : நாட்டில் இன்றுள்ள பிரச்சினைகளை இத் திட்டம் நான்காக வகுக்கின்றது. அவை (அ) சமூக ஏற்றத்தாழ்வு (ஆ) தொழிலின்மை (இ) சேமிப்பு - முதலீடு (ஈ) அந்நியச் செலவாணி என்பனவாகும்.

இலங்கையில் 40 சதவீதக் குடும்பங்களின் சராசரி மாதாந்த வருமானம் 200 ரூபாவிலும் குறைவாகும். மேலும் 40 சதவீதக் குடும்பங்கள் 200 ரூபாவுக்கும் 400 ரூபாவுக்கும் இடைப்பட்ட மாதாந்த வருமானமுடையவை. குறைந்த வருமானக் குடும்பங்களின் வருமான நிலையும் வாழ்க்கைத் தரமும் உயர ஐந்தாண்டுத் திட்டம் வழிவகுக்கின்றது. இதனால் மக்களிடையே காணப்படும் வருமான வாழ்க்கை நிலை ஏற்றத்தாழ்வுகள் சமப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாண்டுத் திட்டத்தின் உடனடி நோக்கம் தொழில் வாய்ப்புக்கள் அளிப்பதேயாகும். இன்று தொழில்செய்யும் திறன்படைத்தோரில் 12 சதவீத மக்கள் தொழிலின்றி இருக்கின்றனர். தொழில் தேடுவோர் தொகை ஆண்டுதோறும் பெருகிவருகின்றது. ஐந்தாண்டுத் திட்டம் கைத்தொழில், கமத்தொழில், கடற்றொழில் ஆகியவற்றை விருத்திசெய்து தொழில் வாய்ப்புகளைப் பெருக்க வழி செய்கின்றது.

பொருளாதார முறையினை அபிவிருத்தி செய்தற் பொருட்டு நாடு அதன் தேசிய வருமானத்தில் இயன்றளவு சேமிக்க முயலுதல்வேண்டும். கடந்த சகாப்தத்தில் நாடு அதன் வருடாந்த வருமானத்தில் 88 சதவீதத்தை நுகர்வுக்காகச் செலவுசெய்து வந்துள்ளது. நாட்டின் உற்பத்தி அளவைப் பெருக்குதற்கு 12 சதவீத வருமானமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. நாடு அதன் தேசிய வருமானத்தில் இயன்றளவு சேமிக்க முயலுதல் வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதாரம் நாட்டின் தேவைக்கேற்ப விருத்திபெறும்.

நாட்டின் அந்நியச் செலவாணி வருமானம் உணவு, புடைவை, மருந்து முதலிய பொருள்களை இறக்குமதி செய்வதற்கே செலவிடப்படுகின்றது. பிறநாடுகளிற் கடன் பட்டும் நுகர்வுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் அந்நியக் கடன்தொகை அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. புதிய திட்டம் அந்நியச் செலவாணியை மீதப்படுத்தி அதனை உள்ளூர் உற்பத்திப் பெருக்கத்தில் முதலீடு செய்யவும் புதுக் கமத்தொழிற் கைத்தொழிற் பொருட்களை ஏற்றுமதி செய்யவும் வழிவகுக்கும்.

2. நோக்கங்கள் : ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஆதாரமாக விளங்கும் சமூக, பொருளாதார நோக்கங்கள் பின்வருமாறு :

(1) பொருளாதார அமைப்பில் நீண்டகால வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு செயற்படுத்துதல், அடிப்படைக் கைத்தொழில்கள் பொருட்டான முதலீடு, புதுப் பயிர்வகை வளர்த்தல்,

மரபியல் சார்பான பொருட்களை மூலப்பொருளாகக் கொண்ட கைத்தொழில்களை உருவாக்கல் என்பன இதன்பால் அடங்கும்.

(2) பொருளாதாரத்தில் மிகுந்துவரும் ஏற்றத்தாள்வுகளை — குறிப்பாக, அதிகரிக்கும் கொடுப்பனவு நிலுவை, தொழிலற்றோர் தொகைப்பெருக்கம் சார்பானவற்றை — சரிப்படுத்துவதற்கு வேண்டிய குறுகியகால நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

(3) நுகர்வுமுறையில் மாற்றங்கள் செய்து, மீள்விநியோக முறையை மேற்கொண்டு சமூகத்தில் விளங்கும் நெருக்கடியுணர்வைக் குறைத்தல்.

(4) இல்ல சுகாதார வசதிகளைச் சிறப்பாக்கிக் குறைந்த வருமான வர்க்கத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

திட்டங்கள் : நாட்டிற் காணப்படக்கூடிய சகல மூல வளங்களையும் குறைந்த செலவிற் கூடிய விளைவைத்தரும் வகையில் பயன்படுத்தும் பல திட்டங்கள் 1972—1976ஆம் ஆண்டுகளுக் கிடையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அவை நாட்டின் எல்லாத் துறைகளையும் அடக்கும் கமத்தொழில், கைத்தொழில், கடற்றொழில், வனவியல், ஏற்றுமதி, கல்வி, சுகாதாரம், வீடமைப்பு முதலிய துறைகளில் பாரிய மாற்றங்களை ஐந்தாண்டுத் திட்டம் ஏற்படுத்தும். தேசிய அபிவிருத்திக்கு உதவவல்ல தனியார்துறைக்குச் சகல வகையிலும் ஊக்கமளிக்கப்படும். ஆனால், இவ்வுதவியானது கொள்ளை லாபமடித்தல், அந்நியச் செலவாணித் துர்ப்பிரயோகம், பொருளாதார அதிகாரம் முதலிய குறைபாடுகளைத் தடுக்கும் நோக்குடனேயே இடம்பெறும்.

4. செயற்படு : நிகழ்ச்சித் திட்டங்களிலெல்லாம் மாவட்ட நிருவாகமே திட்டத்தினைச் செயற்படுத்தும் மைய அச்சாக விளங்கும். மாவட்ட நிலையிற் கருமங்களை ஒன்றிணைக்கும் பொறுப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவிடம் ஒப்படைக்கப்படும். தேசியத் திட்டத்தை பிரதேச மட்டத்தில் செயற்படுத்தும் விடயத்தில் அரசாங்க அதிபர் தொடர்புடைய அமைச்சுகளுக்கும், திட்டமிடல், தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி அமைச்சுக்கும் பொறுப்புடையவராக விளங்குவார். இப் பணியை இலகுவாக்குதற்பொருட்டு மாவட்டங்கள் தோறும் திட்டவமைப்பு அலுவலகங்கள் தாபிக்கப்படும்.

முடிவாக, இன்றைய இடர்நிலையிலிருந்து விடுபடுவ தற்கு ஐந்தாண்டுத் திட்டம் வழிசமைக்கிறது. ஐந்தாண் டுத் திட்டத்தின் வெற்றி அதனைத் திட்டமிட்டவாறு செயற்படுத்தி முடிப்பதிலேயே தங்கியுள்ளது. அவ்விதம் செயற்படுத்தும்போது சமுதாய நிலையிலும் தேசிய நிலை யிலும் பல மாற்றங்கள் ஏற்படும். அதனால் நாம் சில சிரமங்களை அனுபவிக்க நேரிடும். கடுமையாக உழைக்க வேண்டும். அத்துடன் சில தியாகங்களைச் செய்யவேண்டி யும் ஏற்படும். நாம் ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றும் தியாக உணர்வும் கடின உழைப்புங்கொண்டு ஐந்தாண்டு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்புக்கும் கடமைக்கும் எம்மை அர்ப்பணித்தோமானால் ஒளிமயமான ஒரு எதிர்காலம் ஐந்தாண்டுகால முடிவில் பிறக்கும் என் பது உறுதி.

சந்தா விண்ணப்பப் பத்திரம்

நிர்வாகி,
வெற்றிமணி.

கீழ்வரும் முகவரிக்கு 197 ... ஆம் ஆண்டு.....மாதம் தொடக்கம் வெற்றிமணியை அனுப்பிவைக்கவும். வருட சந்தா ரூபா ஐந்து இத்துடன் அனுப்பப்படுகின்றது.

முகவரி : .....

விலாசம் : .....

.....

கையொப்பம்

பணம் அனுப்பவேண்டிய முகவரி :
பொன். இராசரத்தினம்,
சக்தி அச்சகம், ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நண்டுப் படை

நண்டுப் படைகளைச் சேர்ப்பான் — நம்
நாட்டுப் படையிதென் றூர்ப்பான்,

சண்டைக் கருவிகள் வேண்டும் — தாத்தார்
தாரும் தடிக்கம்பை என்பான் — அடா
சுண்டக்காய்ப் பயலே நீ என்றால் — நானே
சுபாஷ் சந்திர போலென நிமிர்வான்.

அண்டை யுலரும் விறகைத் — தூக்கி
ஆயுதம் என்று கொடுப்பான்.

பட்சணப் பானையைக் காலி — பண்ணிப்
படைகளுக் குணவினைத் தருவான்.

தட்சணப் போர்முர சென்றே — தட்டுத்
தகரங்குவளையில் தாளமடிப்பான்.

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

பரிசுபெற்ற நேயர்களுக்கு

வெற்றிமணி வெளியிடும் பொது அறிவுப் போட்டி களில் பரிசுபெறும் நேயர்களுக்கு உரிய புத்தகப் பரிசுகளை பலப்பிட்டி அரூஸ் ஆசிரியர் கொடுப்பதற்குச் சம்மதம் தெரிவித்திருந்தார். பரிசுபெற்ற நேயர்கள் இதுவரை தங்களுக்குரிய பரிசுகள் பெற்றிராவிட்டால் தயவுசெய்து கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு எழுதுங்கள். எழுதியும் கிடைக்காவிட்டால் எமக்கு அறிவிக்கவும்.

BALAPITI AROOS, — ஆசிரியர்
Teacher, Welitara,
BALAPITIYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இரு பாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப் பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும்.

அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி .....

பாடசாலை முகவரி .....

வீட்டு முகவரி .....

பிறந்த திகதி ..... வயது ..... வகுப்பு .....

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

....

ஆசிரியர் / பெற்றோர் கையொப்பம் கையொப்பம்

பேரூர் நன்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறி ந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத் துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விப ரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப் பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிற வர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

வெற்றிமணி, 253½ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பாடசாலை மாதிரி நாடகம்

"சூழ்ச்சி பலித்தது!"

எம். எஸ். ஸ்ரீதயாளன்,
நாவற்காடு அ. த. வித்தியாசாலை, மாம்புரி.

காட்சி 2

[நிழற்காட்சி மட்டும்]

[வெள்ளை நிறச் சேலையாலான முன் திரையில், உட் புறம் இருட்டில், பின்புறமிருந்து ஒளி பாய்ச்சப்படுகிறது. நிழற் காட்சி யில் இந்தக் கட்டம்]

[பின்னணியில் பறையறைவிப்போனின் குரல் மெல்லிய தொனி யில் கேட்டுத் தேய்கிறது]

[டம்... டம்... டம்... (பறையறைவு)

பின்னணி:- அயோத்தியாபுரி வாழ் மகாஜனங்களே! கேளுங்கள்... இந்த நற்செய்தியை. நாளை சுபவேளையில் எங்கள் அயோத்தி மாநகரின் தலைவன் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ தசரத மகா சக்கரவர்த்தியின் மூத்த மைந்தன் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ இராமனுக்கு முடிசூட்டு விழாவும் பட்டாபிஷேகமும் நடைபெறும். இந்தச் சந்தோஷமான தினத்தில் அயோத்தி நகரை அலங்கரித்து குபேர புரியாக்குங் கள். எங்கும் நாட்டியம், நடனம், கூத்துகள் நடத்தி இச் சந் தோஷத்தைக் கொண்டாடுங்கள். இது அரசரின் கட்டளை. டம்...டம்...டம்...!

[அப்போது நிழலில் கூனியின் உருவம். அவள் இந்தச் செய் தியை உற்றுக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். கூனிக்கு இராமன் இலக் குவனுடன் சேர்ந்து சிறுபராயத்தில் மண் உருண்டைகளை அம்பில் வைத்து முதுகில் அடித்து தன்னை அவமானப்படுத்தித் துன்புறுத் திய பழைய சம்பவங்களனைத்தும் நினைவுக்கு வருகிறது.]

கூனியின் சிந்தனை — நடிப்பு

[நிழலுருவில் — சிறு பராயத்தில் இராம லக்குவர்கள் மந்தரை யின் முதுகில் மண் உருண்டை எய்து கேலி செய்யும் காட்சி]

இராம லக்குவர்கள்:- (கேலி தோன்றும் தொனியில் சிறு பிள்ளைச் சிரிப்பொலி மட்டும்) ஹ!...ஹ!...ஹ!...ஹா!...

கூனி:- [உனக்கு நல்ல பாடம் கற்பிப்பேன் பார் என்று கூறும் பாவனையில் ஆத்திரமும், பழிவாங்கும் குணமும் கொண்டு நடிக்கும் பாவனை]

[தேவைக்கேற்ப இக் காட்சியின்போது பின்னணியிலே இச் சம்ப வம் விமர்சிக்கப்படலாம்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியமைப்பு, ஒலிப் பின்னணி மூலம் இக் காட்சி பழைய சம்பவ நினைவுகள் என்பதைக் காட்டலாம்.

[பழைய நினைவு] நிழற்காட்சி முடிகிறது.

காட்சி 3

இடம் : கைகேயியின் அந்தப்புரம்.

பாத்திரங்கள் : கைகேயி, மந்தரை (கூனி), பணிப்பெண்.

[வெள்ளை நிறமான படுக்கை விரிப்புப் போடப்பட்டு மலர் தூவப்பட்ட அழகான கட்டிலில் கைகேயி ஆனந்த நித்திரை செய்து கொண்டிருக்கிறாள். பணிப்பெண் பக்கலில் சாமரை வீசிக்கொண்டு நிற்கிறாள்; வஞ்சம் தீர்க்கும் நெஞ்சுடன் கூனி கைகேயியின் கட்டிலண்டை அணுகுகிறாள்.]

மந்தரை : வந்ததே மோசம்! வந்ததே மோசம்!! பேரிடர் அணுகவும் வருந்தாமல் அமைதியாக நித்திரை செய்கிறாயே கைகேயி, கைகேயி யம்மா! [தட்டி எழுப்புகிறாள்]

கைகேயி : மந்தரை! என்ன மந்தரை! என்ன சொன்னாய்? மூவுலகும் போற்றும் மாவீரன் தசரத வேந்தனைக் கணவனாகவும், இராமன் முதலாய நான்கு சிங்கேறுகளை மைந்தர்களாகவும் பெற்ற எனக்குப் பேரிடரா? பைத்தியக்காரி - என்ன பிதற்றுகிறாய்?

மந்தரை : அரசியே! யாருக்குப் பைத்தியமென்பதை நாளை காண்பாய். நாளை அந்தத் துஷ்டன் இராமனுக்குப் பட்டாபிஷேகமாம். அந்தத் தசரத மன்னன் இராமனுக்கே இராட்சியத்தைக் கொடுத்து இனித் தவம் செய்யப்போகிறாராம் அரசி. ஆமாம் நாளை இராமன் அயோத்தியின் அரசனும்.

கைகேயி : (மட்டில்லா மகிழ்ச்சி கொண்டவளாய் படுக்கையிலிருந்து எழுந்து) மந்தரை... மந்தரை... என்ன சொல்கிறாய்? என் செவிகளையே நம்ப முடியவில்லையே! இது உண்மையா? என் செல்வம்... என் மகன் இராமன் அயோத்தியின் அரசனா? (தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றிக் கூனியிடம் கொடுக்கிறாள்)

இந்தா மந்தரை இந்தா. நல்லதோர் நற்செய்தியைத் தெரிவித்து என் சிந்தை குளிரவைத்த உனக்கு என் பரிசு.

மந்தரை : இராமனுக்கு... அரசு...

(ஆத்திரம் பொங்கி அந்த மாலையை நிலத்திலே குழியிழும்படியாகப் படீரென்று எறிந்துவிட்டுப் பெருமூச்சுடன் விம்மி அழுகிறாள்.)

கைகேயி: ஆமாம் மந்தரை. இராமன் நல்லவன், வல்லவன், குடிகளிடத்தில் அன்பு பூண்டவன். இராமன் என் வலக்கண், பரதன் என் இடக்கண். என் செல்வம் இராமன் அரசனுவதால் நானும் பெருமையடைகிறேன் மந்தரை.

மந்தரை : கைகேயியம்மா! உன்னை ஏமாற்றிவிட்டார்கள். கைகேயி! நீ ஒரு ஏமாளி! கோசலை உயர்ந்துவிட்டாள். நீ படுகுழியில் விழப்போகிறாய்...

கைகேயி: மன்னர்க்கு மன்னனும் விளங்கும் தசரதன் என் மணாளன். சொல்ல முடியாத நல்லிசைவாய்ந்த பரதன் என் மைந்தன். அயோத்தியாபுரிக்கு வாரிசாக என் செல்வம் இராமன். இதற்குமேல் அந்தக் கோசலை எய்திய வாழ்வுதான் என்ன கைகேயி சொல். நீ எதையோ ஒளிக்கிறாய். தயங்காமல் சொல்லிவிடு மந்தரை.

மந்தரை : இனியும் சொல்லித்தான் என்ன! ஊம்... இதெல்லாம் நாளை தெரியும். கோசலை மணாளன் தசரதன் சிங்காசனத் திருக்கையில் இராமனும், கோசலையும் ஏன் தசரத வேந்தனுமே உன்மேல் ஆருத அன்புள்ளவர்களாக நடிக்கிறார்கள். பேய்ச்சி... நீ இந்தப் பொய்ப் பாசாங்குகளையெல்லாம் நம்பியே விட்டாய்... ஆமாம்... ஆமாம்... இனியென்ன நீ விரும்பி கோசலைக்கு அடிமையாயிரு... (இகழ்ச்சிக்குறி தோன்றும் சிரிப்பு) ஆனால் நானே உன் மாற்றாளாகிய கோசலையின் தாதியருக்கு அடிமையானவளாக மாட்டேன் அரசி!

கைகேயி : மந்தரை... என்ன சொல்கிறாய்? என்னை ஏமாற்றவா? யாரை யார் ஏமாற்றுவது? யாருக்கு யார் அடிமை? இது என்ன புதுமையான கதை.

மந்தரை : ஆமாம் கைகேயி! நாளை இராமன் பட்டத்து அரசன் கோசலை பேரரசியார். நீயும் நின் வயிற்றிலுதித்த பாவி பரதனும், நானும் அடிமைகள்.

[கைகேயியின் மனம் சிறிது சிறிதாக மாற்றமடைகிறது; ஆவேசம் முகத்தில் தோன்ற...]

கைகேயி : மந்தரை... இராமன் அரசு பெறுவதால் கோசலை பெறும் உயர்ச்சிதான் என்ன?

மந்தரை : சொல்கிறேன் கேள். கோசலையின் புத்தித்திறத்தால் அவளுடைய புதல்வன் இராமன் அரசாளப்போகிறான். புத்தியறியாத உன் வயிற்றிற்பிறந்த பரதனை பாக்கியமில்லாதவனென்ன. பாவம் பரதன்; அயோத்தியை ஆண்ட அரசகுல வரிசையில் வைத்து பரதனை மதிக்க அருகதை ஏது? உம்??... அவன் உயிரோடு இருத்தலிலும் சாகிறதுதான் மேல். அவன் தந்தை கொடியன்; தாயாகிய நீயும் கொடியை; பாவம் பரதன் என்செய்வான்? (சிந்திப்பவள் போன்று விரலை நெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வைத்து) ஓகோ! புரிகிறது; புரிகிறது. பரதனைக் கேகய நாட்டிற்கு மன்னன் அனுப்பிவைத்த காரணத்தை இப்போது தான் புரிந்துகொண்டேன். அறிவிலியாகிய உனக்கு இது எங்கே புரியப்போகிறது...

கைகேயி, உன் மடமையால் பாவம் பரதன் கெட்டழிந் தான். அவனிடத்தே இயல்பாகவுள்ள கல்வி, இளமை, ஆற் றல், வன்மை, அழ த ஆகிய எல்லையில்லாத குணங்களனைத்தும் இழிநிலத்திற் சொரிந்த அமுதைப்போல வீணுகினவே! ஐயோ நீதான் பாவி கைகேயி.

(மனம் மாறிய நிலையில்)

கைகேயி : மந்தரை, மந்தரை. என்னை உன் சொல்லம்புகளாற் சுடாதே. நான் ஏமாளிதான். என் மானம் அழிந்தது. என் உய்வு ஐயோ.

மந்தரை : ஆமாம் கைகேயி இன்னும் கேள்; பேதையே! நாளை இராமனுக்கு அரண்மனையில் பட்டாபிஷேகம் 'ஜாம்', 'ஜாம்' என்று நடக்கும். பட்டாபிஷேகம் முடிந்ததும் தசரதராஜா தவஞ்செய்ய வனத்திற்குச் சென்றுவிடுவார். அப்புறம் உன் வயிற்றிற்பிறந்த குற்றத்திற்காகப் பாவம் பரதன் படப்போ கிறபாட்டை... உம்... நீயே இருந்து பார். அதற்குமுன் (கை கேயியின் மனமாற்றத்தை உணர்ந்தவளாய்) வெள்ளம் வர முன் அணைகட்டினால்...; உன் விஷப்பயன் உன்னை விடவேண் டுமே... ம்... ம்... சரி நான் போய்வருகிறேன் கைகேயியம்மா.

(அந்தப்புரத்தினின்றும் வெளியேறுவதற்காகப் பாசாங்கு நடை யிட்டு நடக்கிறாள்)

(முகமலர்ச்சியுடன்)

கைகேயி : மந்தரை, மந்தரை. என் அன்புக்குரிய தோழியே! நில் லங்கே; கொஞ்சம் பொறு. நீ எனக்கும் நல்லவளானாய்; என் மைந்தன் பரதனுக்கும் நல்லவளானாய்.

ஆ... கோசலைக்கு நான் அடிமையாவதா? ஒருநாளும் முடி யாது; விடவும் மாட்டேன். பரதன், என் மைந்தன் பட்டத் துக்கு வரவேண்டும்! என் மகன் அயோத்தியின் வேந்தனாக வேண்டும்.! சொல்... சொல் தோழியே! இதை எங்ஙனம் செய்யலாம்? நீதான் புத்திசாலி, நீதான் என் கண்களைத் திறந்துவைத்த தெய்வம் மந்தரை. எங்கே எங்கே உன புத்தி மதி.

[மந்தரையின் கைகளைப்பற்றி வேண்டுகிறாள் கைகேயி)

— தொடரும்

பங்குடைமை அறிமுகம் (14)

வை. சி. சிவஞானம்

உதாரண விளக்கம் 27

நன்மதிப்புக் கணக்கு	Dr. ( )	9000	
பாபு மூலதனக் கணக்கு	Cr. ( )		4500
கோபு ,, ,,	Cr. ( )		3000
வேணு ,, ,,	Cr. ( )		1500
வேணு மூலதனக் கணக்கு	Dr. ( )	21500	
பாபு ,, ,,	Cr. ( )		12900
கோபு ,, ,,	Cr. ( )		8600

பாபு கோபு என்னும் பங்காளரின் புதிய ஐந்தொகை

மூலதனம்		நன்மதிப்பு	9000
பாபு	77400	நிலையான சொத்துக்கள்	75000
கோபு	51600	இருப்பு	25000
	129000	கடன்பட்டோர்	15000
கடன் கொடுத்தோர்	5000	வங்கியில்	10000
	134000		134000

உதாரணக் கணக்கு

மேற்படி கணக்கில் வேணுவின் மூலதனத்தைப் பங்குடைமை வியாபார நிலையப் பணத்திலிருந்து கொடுக்கப்பட்ட தெனக் கொண்டு கணக்குகளைச் செய்க.

உதாரண விளக்கம் 28

பாபு நடைமுறைக் க/கு	Dr. ( )	12900	
கோபு ,, ,,	Dr. ( )	8600	
வங்கிக் கணக்கு	Cr. ( )		21500

பாபு, கோபு என்னும் பங்காளரின் ஐந்தொகை

மூலதனம்		நன்மதிப்பு	9000
பாபு	77400	நிலையான சொத்துக்கள்	75000
கோபு	51600	இருப்பு	25000
	129000	கடன்பட்டோர்	15000
வ. மே. ப.	11500	பாபு நடைமுறைக் க/கு	12900
கடன் கொடுத்தோர்	5000	கோபு ,, ,,	8600
	145500		145500

7. பங்காளர் ஆயுளபாயக் காப்புறுதிப் பத்திரம்

வியாபார நிலையத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகைகள் இருக்கும்போது பங்காளருக்கு மரணமேற்பட்டால் அப் பொறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்களை நிவர்த்தி செய்வதற்காகவும், பங்காளரின் நன்மைக்காகவும் வியாபார நிலையம் பங்காளர்மீது கூட்டு ஆயுளபாயக் காப்புறுதி செய்தலுண்டு. அவ்விதம் காப்புறுதி செய்யப்பட்டால் காலமுடிவில் அல்லது பங்காளர் ஒருவர் இறந்தால் இவற்றில் எது முன்பு நடக்கின்றதோ அப்போது காப்புறுதிப் பொறுப்பாளர் காப்புறுதித் தொகையை வழங்குவர். இவ்விதம் காப்புறுதி செய்யும்போது கணக்கேடுகளில் நான்கு முறையாகக் கணக்குகளை எழுதலாம்.

முதலாவது முறை

ஒவ்வொரு வருடத்திலும் காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்துந் தொகையைக் காப்புறுதிக் கட்டணக் கணக்கின் Dr. ( ) பக்கத்திலும் காசு அல்லது வங்கிக் கணக்கின் Cr. ( ) பக்கத்திலும் பதிதல் வேண்டும். ஒவ்வொரு வருட முடிவிலும் காப்புறுதிக் கட்டணத் தொகையை இலாப நட்டக் கணக்குக்கு மாற்றுதல் வேண்டும். கால முடிவில் அல்லது ஒரு பங்காளர் இறந்தால் காப்புறுதிப் பொறுப்பாளர் தருந் தொகையை இலாப நட்டத்தைப் பங்கிடும் விகிதத்தில் பிரித்துப் பங்காளர் மூலதனத்துடன் அத் தொகைகளைச் சேர்க்கவேண்டும். எனவே காப்புறுதிப் பொறுப்பாளர் தரும் டணத்தைக் காசு அல்லது வங்கிக் கணக்கின் Dr. ( ) பக்கத்திலும் பங்காளர் மூலதனக் கணக்கின் Cr. ( ) பக்கத்திலும் பதிதல் வேண்டும்.

இம்முறையில் காப்புறுதிப் பத்திரக் கணக்குகளைப் பதிந்தால் காப்புறுதிப் பத்திரத் தொகை பதியப்படாத சொத்தாகவும் மறைவொதுக்கமாகவும் இருக்கும்.

உதாரணக் கணக்கு

A, B, C என்னும் பங்காளர் இலாப நட்டத்தை முறையே 2, 2, 1 என்ற ரீதியில் பங்கிடும் பங்காளர். மூலதனம் A 40000 B 40000, C 20000. வியாபார நிலையம் 10000 ரூபாவுக்கு ஒரு காப்புறுதிப் பத்திரம் எடுத்து, ஆண்டுக் கட்டணமாக 1000 ரூபா செலுத்தி வருகின்றது. 5 வருடங்களின் பின் C என்னும் பங்காளன் இறந்தான். காப்புறுதிக் கட்டணம், காப்புறுதிப் பொறுப்பாளர் தருந் தொகை என்பன எவ்வாறு கணக்குகளில் பதியப்படும் என்பதைக் காட்டுக.

உதாரண விளக்கம் 29

காப்புறுதிக் கட்டணம்

முதலாம் வருடம்

காசால்	1000	இலாப நட்டக் கணக்கு	1000
	1000		1000

இரண்டாம் வருடம்

காசால்	1000	இலாப நட்டக் கணக்கு	1000
	1000		1000

மூன்றும் வருடம்

காசால்	1000	இலாப நட்டக் கணக்கு	1000
	1000		1000

நான்காம் வருடம்

காசால்	1000	இலாப நட்டக் கணக்கு	1000
	1000		1000

ஐந்தாம் வருடம்

காசால்	1000	இலாப நட்டக் கணக்கு	1000
	1000		1000

காசுக் கணக்கு

காப்புறுதியால்	10000

A $10000 \times \frac{2}{5} = 4000$

B $10000 \times \frac{2}{5} = 4000$

C $10000 \times \frac{1}{5} = 2000$

மூலதனக் கணக்கு

	A	B	C		A	B	C
மீதி	44000	44000	22000	மீதி	40000	40000	20000
				காப்புறுதி	4000	4000	2000
	44000	44000	22000		44000	44000	22000

இரண்டாவது முறை

வருடந்தோறும் செலுத்தப்படும் காப்புறுதிக் கட்டணத் தொகை காப்புறுதிப் பத்திரத்தின் Dr. ( ) பக்கத்திலும் காசு அல்லது வங்கிக் கணக்கின் Cr. ( ) பக்கத்திலும் பதியப்படும். காப்புறுதிப் பத்திரத்தில் பதியப்பட்ட தொகை ஒரு சொத்தாகவே கருதப்பட்டு ஐந்தொகையில் சொத்துக்கள் பாகத்தில் காட்டப்படும். கால முடிவில் இதற்குரிய பணத்தைப் பெற்றால் காசு அல்லது வங்கிக் கணக்கின் Dr. ( ) பக்கத்திலும் காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Cr. ( ) பக்கத்திலும் பதியப்படும். இவ்விதி பதிவுகளால் சொத்தின் பெயர் மாற்றமடைந்ததே யன்றி பெறுமதித் தொகையில் மாற்றமில்லை. ஆனால் காப்புறுதிப் பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரக் கால முடிவுக்கு முன் பங்காளர் ஒருவர் இறந்தால் காப் புறுதிப் பொறுப்பாளர் தருந் தொகையைக் காசு அல்லது வங்கிக் கணக்கில் Dr. ( ) பக்கத்தில் பதிந்து காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Cr. ( ) பக்கத்தில் பதிதல் வேண்டும். காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Dr. ( ) பக்கத் தொகையிலும் கூடுதலாக வுள்ள Cr. ( ) பாகத் தொகையை இலாப நட்டத்தைப் பிரிக் கும் முறையில் பங்காளர் மூலதனக் கணக்குக்கு மாற்றுதல் வேண்டும்.

உதாரண விளக்கம் 30

காப்புறுதிப் பத்திரக் கணக்கு

1ஆம் வருடக் கட்டணம்	1000	காப்புறுதிப் பொறுப்.	10000
2ஆம் வருடக் கட்டணம்	1000		
3ஆம் வருடக் கட்டணம்	1000		
4ஆம் வருடக் கட்டணம்	1000		
5ஆம வருடக் கட்டணம்	1000		
A மூலதனக் கணக்கு	1000		
B ,, ,,	1000		
C ,, ,,	1000		
	10000		10000

காப்புறுதித் தொகை = 10000
காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்தியதொகை = 5000
வித்தியாசம் = 10000—5000
= 5000

A பங்கு $\frac{2}{5} \times 5000 = 2000$

B பங்கு $\frac{2}{5} \times 5000 = 2000$

C பங்கு $\frac{1}{5} \times 5000 = 1000$

பங்காளர் மூலதனக் கணக்கு

	A	B	C
மீதி	42000	42000	21000
	42000	42000	21000

	A	B	C
மீதி	40000	40000	20000
காப்புறுதி	2000	2000	1000
	42000	42000	21000

— தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை பிரங்கம்

யார் மறப்பார்?

— சாரதா —

1. அன்புசத் தியம கிம்சை
ஆதிநல் லிலட்சி யங்கள்
மன்பதை களுக்குள் ளோங்க
மாண்புறு வழிகள் காட்டித்
தன்னிக ரில்லா வீரத்
தளபதி யாகி நின்று
அன்னியர்க் கடிமை யான
அகிலபா ரதத்தை மீட்ட —

2. புண்ணிய புருடர் காந்தி
போதனை களின்வி ளக்கம்
என்னவே யினைந்து ழைத்த
இராசதந் திரியாம் மேதை;
பன்னுரா ஜாஜிப் பேரார்
பண்புகூர் தத்துவ ஞானி
எண்ணுதொண் ணூற்று நாலாண்(டு)
எல்லையில் அமர ராஞர் —

3. என்றசொல் செவிப்பு குந்து
இதயத்தி னுட்செ றிந்து
துன்பவே தனைப்பட் டேங்கத்
தொடர்ந்தெமை வருத்து தம்மா!
நன்மதி வாணன்; பண்டை
நவீனசாத் திரவிற் பன்னன்;
இன்றைய வுலகின் போக்கிற்(கு)
இன்மருந் துரைக்க வல்லோன்!

4. எழுத்துல கத்திற் கூட,
இணையிலாப் புகழ்ப டைத்தோன்;
கொழுத்தசிந் தனையின் சிற்பி;
கோதிலாக் குணத்தின் குன்று;
அழுத்தமாய்க் கண்ணன் கூறும்
அருள்நெறிக் கருமை வீரன்;
பழுத்ததே சியக்கொ ழுந்தாம்
பண்பனை யார்ம றப்பார்?

★

முத்தம் ஒன்று வேண்டும்

— க. மொழிவரதன் —

பொன்னே மணியே பூங்கொடியே
புன்னகை பூத்திடு மிளங்கொடியே
கண்ணே கனியே கவினுருவே — எனைக்
கட்டியணைத்தே முத்தந்தா — எனைக்
கட்டியணைத்தே முத்தந்தா!

மழலைச் செல்வமே மரகதமே
மணி விளக்கேயென் மாமணியே
குலத்தின் சுடரே கோமளமே — உன்
கொஞ்சுதமிழில் முத்தந்தா — உன்
கொஞ்சுதமிழில் முத்தந்தா!

அழகு மொழியே அருள்விழியே
அசைந்திடு மழகே பைங்கிளியே
இளகு மனமே இலக்குயிலே — எனக்கு
இச்சென்றேயோர் முத்தந்தா — எனக்கு
இச்சென்றேயோர் முத்தந்தா!

வெள்ளை யுளமே வெண்மதியே
வேதனை தீர்க்கும் அருளொளியே
கள்ளமில் இன்பே கற்பகமே — என்
கன்னத்திலேயோர் முத்தந்தா — என்
கன்னத்திலேயோர் முத்தந்தா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மைக்கு விடிவில்லையோ!

— அட்டாம்பிட்டிய ரமீ —

கை யேந்தி இரந்திட்டால் — பலர்
கை கொட்டிச் சிரிப்பார்கள்
வையக மீதில் வறுமை — செத்து
மாண்டிடும் காலமும் வருமோ?

தொல்லைகள் சூழ்ந்த துலகம் — கொடும்
சூழ்ச்சிகள் நிறைந்த துலகம்
எல்லைக ளிதற் கில்லையோ — என்
ஏழ்மைக்கு விடி வில்லையோ!

விந்தைகள் நிறைந்த துலகம் — கொடும்
வேதனை நிறைந்த துலகம்
சிந்தனையிற் சித்தனை யில்லையோ — ஏழை
சிறக்கவும் வழி யில்லையோ!

சாதனை செய்யும் உலகம் — மனச்
சாந்திக்குச் சதிசெய்யும் போது
வேதனைதான் மிகும் வாழ்வில் — வெறும்
போதனைகள் என்ன செய்யும்?

★★

அன்னைநாட்டை அழகு செய்வோம்!

— நிந்தவூர் ஏ. சபாத் அஹமட் —

கொடுமைகள் யாவும் இழிப்போம்! — கொண்ட
கொள்கையை நன்கு வளர்ப்போம்!
இதமான வாழ்க்கை அமைப்போம்! — இன்ப
இலங்கையை நன்கு சமைப்போம்!

காடுகள் வெட்டி எரிப்போம்! — நல்ல
கழனிகள் எங்கும் வளர்ப்போம்!
தேடிடும் செல்வம் யாவும் — இங்கு
தேவை வரையினில் சேர்ப்போம்!

மண்ணில் விளைந்த புதுமை! — உலக
மக்கள் எவர்க்கும் பொதுமை!
எண்ணி முடிக்க மறுப்போர் — இங்கு
இருக்க முற்றும் வெறுப்போம்!

தேசநலம் என்றும் காப்போம்! — திரு
செல்வ வளம்மிகச் சேர்ப்போம்!
பேசுமின மக்கள் மொழியை — பெரும்
பேறுக எண்ணி மதிப்போம்!

★★

தமிழ் அன்னை

— ஏ. ஜெயஸ்ரீ, வதிரி. —

பொதிகை மலையில் பிறந்தவளாம்
புலவர் மடியில் வளர்ந்தவளாம்
நதியில் காற்றில் கலந்தவளாம்
நாடு போற்றும் தமிழ்மொழியாம்.

வேறு

கற்றவர்க்கும் மற்றவர்க்கும்
கரும்பெனவே இனித்திடுவாள்
பற்பலரும் போய்விடவே
பாரினிலே புகழ்படைத்தாள்.

முல்லைநறும் மணம்போல
முகையவிழ்ந்து மணம்வீசி
எல்லையில்லா இன்பந்தரும்
இனியதமிழ் வாழியவே!

★★

மனச்சாட்சி

— பதியதளாவ கே. எம். பாறூக் —

சுப்பையா சென்றுகொண்டிருப்பது துரிதசேவை பஸ் வண்டி என்பதால் வண்டி காற்றைக் கிழித்துக்கொண்டு படு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. தனது சொந்த ஊரை அடையச் சுப்பையாவுக்கு இன்னும் இருபது மைல்களே இருந்தன. அடைக்கப்பட்டிருந்த பஸ்வண்டியின் கண்ணாடிக் கதவைத் திறந்து கழுத்தை நீட்டி வாய்க்குள் அவ்வளவு நேரமும் அடக்கி வைத்துக்கொண்டிருந்த வெற்றிலை எச்சிலை வெளியே துப்பிவிட்டு உள்ளே ஒருமுறை நோட்டமிட்டுக் கொண்டார். பயணத்தின் அலுப்பால் பிரயாணிகள் அசந்துபோய்க் காணப்பட்டனர். ஒருசிலர் பத்திரிகைகளைப் பார்த்துக்கொண்டும், ஒருசிலர் அரை குறை நித்திரை செய்துகொண்டு பக்கத்தில் இருப்பவர்களின்மேல் விழுவதும், பின் தாம் செய்தது தவறு அதை மன்னித்துக்கொள்ளுங்கள் என்பதுபோல் தலையைச் சரித்துப் பல்லை இழித்துக்கொள்வதாகவும் இருந்தனர்.

உள்ளே பார்த்த சுப்பையா இப்போதுதான் தனது பின்புறமாகத் திரும்பிப் பார்த்தார். ஒருசில ஆண்கள் நின்றுகொண்டு பிரயாணம்செய்ய அவர்கள் மத்தியில் ஒரு கை கைக்குழந்தை ஒன்றை ஏந்தியவாறும் மறுகை மேலுள்ள கம்பியைக் குரங்குப்பிடி பிடித்தவண்ணமுமாக சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருத்தி நின்றுகொண்டு பிரயாணம் செய்வதைக் கண்டார். இதைக்கண்ட சுப்பையாவுக்குப் பிரயாணிகள்மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''சீ... இவர்கள் என்ன மனுஷர்கள். நின்றுகொண்டிருப்பது ஒரு பெண் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தும் ஒருவராவது இடங்கொடுக்காமல் கல்லாக இருக்கிறார்களே'' எனத் தனக்குள் முணுமுணுத்துக்கொண்டார்.

கடந்த வாரம் இப்படித்தான் சுப்பையா எங்கோ போவதற்காக பஸ்வண்டியில் ஏறியபோது அதில் பிரயாணிகள் கூடுதலாக இருந்ததினால் இருக்க இடமின்றி நின்றுகொண்டே பிரயாணம் செய்ய நேரிட்டது. அப்போது தான் கொண்டுவந்த சிறிய பார்சலைக்கூட கையில் தூக்கிக்கொண்டு நிற்க முடியாது பக்கத்திலுள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவரிடம் பார்சலைக் கொடுத்துவிட்டுப் பிரயாணம் செய்த நிகழ்ச்சியும் சுப்பையாவின் உள்ளத்தில் மின்னி மறைந்தது. தனக்கே அந்தச் சிறிய பார்சலே பெரிய சங்கடமாக இருந்ததென்றால் குழந்தை ஒன்றைத் தூக்கிக்கொண்டு அதுவும் ஒரு பெண் நினைக்க நினைக்க, குறிப்பாக பெண்ணின் பக்கத்து ஆசனங்களில் இருந்துகொண்டு பிரயாணம் செய்பவர்கள்மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இவைகளெல்லாம் அவருக்கு தான் கையில் வைத்திருக்கும் ''பெண்ணின் பெருமை'' என்ற நூலுக்குக்கூட மாசுபடுத்துவது போலிருந்தது.

ஓடிக்கொண்டிருந்த பஸ்வண்டி ஓரிடத்தில் நிற்கவே ஆசனத்தில் இருந்த ஒருவர் எழுந்தார். எழுந்ததுதான் தாமதம். பின்னால் நின்றுகொண்டிருந்த வாலிபன் ஒருவன் விழுந்தடித்துக்கொண்டு வந்து அந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டான். இதைக் கண்டபோது அந்த இளைஞனின் கன்னத்தில் இரண்டு வைக்க வேண்டும்போலிருந்தது சுப்பையாவுக்கு.

பஸ்வண்டி தொடர்ந்து ஓடி மீண்டும் ஒரு பஸ் தரிப்பில் நின்றது. ஆமாம் சுப்பையா இறங்கவேண்டிய இடமும் வந்துவிட்டது. சுப்பையா ஆசனத்தை விட்டு எழுந்ததுதான் தாமதம் பஸ்தரிப்பில்நின்று ஏறிய இன்னொருவர் ஓடிப்போய் சுப்பையா இருந்துவந்த இடத்தைச் சுவீகரித்துக்கொண்டார். பஸ்வண்டியை விட்டு இறங்கு முன் சுப்பையா அந்தப் பெண்மணியைப் பார்த்தார்.

இன்னும் அந்தப் பெண்மணி நின்றுகொண்டே இருந்தாள். ஐயோ! பாவம் சுப்பையாவின் உள்ளம் முணு முணுத்தது.

அப்போது ''சீ நீயும் ஒரு மனிதனு? இவ்வளவு நேரமும் பிறர்மீதுதானே குறை கண்டுவந்தாய். அதே நேரம் அதே குறையை நீயும் செய்துகொண்டிருந்தாய் என்பதை மறந்துவிட்டாயா? மற்றவர்களே எதிர்பார்ப்பதைவிட்டு நீ எழுந்து அந்தப் பெண்ணுக்கு உனது இடத்தைக் கொடுத்திருக்கலாம்தானே? இதுதானே மனிதனின் நல்ல பண்பாடுகூட. இதிலிருந்து நீ எல்லோரையும்விட ஒரு சுயநலவாதி என்பது புலனாகிறது'' சுப்பையாவின் மனச்சாட்சி உண்மையை எடுத்துக் கூறியது.

**

தாய்

தெய்வநாயகி, தேவிபுரம்.

கல்தோன்றி மண்தோன்றுக் காலத்திலே தோன்றியது மனித இனம். அவனுடன் பிறந்தவை ஆடை அணிகளல்ல; பண்பு, பாசம் என்பவையே. பண்பு இல்லாத பல மனிதரை இப் பாரிலே நாம் பார்க்கலாம். ஆனால் பாசம் அற்ற மனிதனை எவனும் பார்க்க முடியாது.

பாசங்கள் பலவகைகள் உண்டு எனலாம். உலக நியதியின்படி அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, தந்தை, நண்பன், மாமன், தாய் இன்னும் எத்தனையோ பாசங்கள். எத்தனைவகை இருந்தாலும் ஆதரவு கூடியது தாய்ப் பாசம். அதற்கு நிகர் அகிலத்தில் வேறெதுவுமில்லை. தாய்க்கு நிகர் தாய்தான்.

தாய் என்பவள் பாசத்தில் மட்டும்தான் தனியிடம் வகிக்கிறாளா என நோக்குமிடத்து தாய்க்கு நம் முன்னோர்கூட முதலிடம் அளித்திருப்பது பல மேற்கோள்களால் புலனாகிறது. 'தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை', 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தாய்சொல்லைத் தட்டாதே' இப்படியெல்லாம் விழித்த வர்கள் பெரிய சமயத் தொண்டர்கள், கவிஞர்கள். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றார் நமது மூதாட்டி ஔவை. இவ்வாக்கு சாதி மத பேத மற்றது. நாம் இந்த உலகில் உதிக்கும்போது காணும் தெய்வம் நமது தாய்தான். அந்தத் தெய்வத்தை வணங்குவது நமது தலையாய கடமையாகும். சாதி, மத, பேத மற்று எளிய நடையில் அரிய கருத்தை என்நாட்டவரும் ஏற்கக்கூடிய முயையில் எமக்கு அளித்த திருவள்ளுவப் பெருந்தகைகூட தமது முதல் அதிகாரம் கடவுள் வணக்கத்தில் 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்றார். ஆதி என்ற தாய்க்கே முதலிடம் அளிக்கிறார்.

ஒருவன் பிறநாட்டவன் ஒருவனைக் கண்டால் உனது தாய்நாடு எது என வினவுகிறான். அதேபோன்று மொழியை எடுத்துக்கொள்வோமேயானால் ஒருவன் தான் பேசும் முதல் மொழியைத் தாய்மொழி என்கிறான். எவரும் தகப்பன் நாடு, தகப்பன் மொழி என்று பேசுவதில்லை. ஒரு பிறந்த குழந்தையை நோக்கினால் அது தமிழ் குழந்தையாக இருந்தால் 'அம்மா என்றும் முஸ்லீம் குழந்தையாக இருந்தால் 'உம்மா' என்றும் அழைக்கிறது இன்னும் பிறமொழி பேசும் குழந்தையாக இருந்தாதல் தனது மொழியில் தான் பிறந்தவுடன் தனது தாயை அழைக்கிறது. ஒரு நோயாளியையோ அன்றி ஏதாவது அபாயத்திற்கு உட்பட்டவனையோ பார்த்தால் தன் வேதனை பொறுக்க மாட்டாமல் விம்மிக் கத்தும்போது ஐயோ! அம்மா! என் தாயே! பெற்றவளே! என்றுதான் விழிக்கிறான். இவைகள் யாவும் நாம் அன்றுடய நிகழ்ச்சிகளில் காணக்கூடியவை.

அடுத்து ஒருவன் முதல் செய்யும் முயற்சியைக் கன்னி முயற்சி என்கிறார்கள். உதாரணமாகக் கண்ணப்பநாயனார் ஆடிய முதல் வேட்டைக்கு 'கன்னி வேட்டை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் நாயன்மார் சரிதத்தில். அலை கடலைக்கூட சமுத்திராதேவி என்றும் நீர் நிறைதந்புனித வாவிகளைக் கங்காதேவி என்றும் அழைக்கிறார்கள்.

தாய்க்குச் சிறப்புள்ள இந்த அகிலத்தில்; தாய் என்பவள் ஒரு குழந்தையைப் பெற்றுவிடுவது மட்டும் தனது கடமையென நினைக்கக் கூடாது. அவள் தனது குழந்தையை பெயரிட்டு, சீராட்டி, தாலாட்டி, கோதாட்டி, பாலூட்டி வளர்க்கிறாள். அத்துடன் விடுகிறாளா? அதற்குக் கல்வி என்னும் கடைந்தமுதூட்டி, தான்வாழும் சமுதாயத்தில் பாராட்டுப்பெறும் பிரசையாக வளாப்பதையே தன் கடமையாக் கொள்கிறாள்.

ஒரு தாய் நாம் முதல் கண்ட தெய்வம். அவள் எங்களை வளர்த்து நல்ல சமுதாயத்தில் வாழ விட்டமைக்கு நாம் எமது வாழ்நாளில் கடைசித் துடிப்பு அடங்கும்வரை நன்றிசெய்யவும் பூசிக்கவும் கடமைப்பட்டவர்களாவோம். அப்படி நன்றி மறந்தால் நாம் மீளாத பாவத்திற்கு ஆளாவோம். அந்தப் பாவத்தில் ஆளாகாமல் எமது தாயைப் பூசிப்போமாக.

''நன்றி மறத்தல் நன்றன்று''

★★

கனவா? நனவா?

சேகரன்

சாம்பசிவ முதலியாருக்குப் பல காணி வளவுகள் உண்டு. அவரிடம் சில யானைகளும் உண்டு. அவர் ஒரு நாள் ஒரு கனவு கண்டார். ஆனால் அது அவருக்கு அதிசயமாக இருந்தது. அது என்ன கனவு?

ஒரு நாள் முதலியார் தூங்கிக்கொண்டு இருக்கும் நேரம் கனவில் ஒரு யானை அவரை மிதிக்க வந்தது. உடனே எழும்பி ஓட ஆயத்தமானார். என்ன அதிசயம்! ஒரு யானை நிஜமாகவே இருந்தது. ஆனால் அவரை மிதிப்பதற்கு நிற்காமல் சாப்பாடு கேட்க நின்றது. அவருக்கு அது கனவா நனவா என்று தெரியவில்லை!

மாணவன்:- சேர், பூமிக்கு ரேகையுண்டா?
ஆசிரியர்:- ஏன்?
மாணவன்:- பூமிக்கு மத்தியரேகை, கடகரேகை எல்லாம் இருக்கே.
ஆசிரியர்:- ! ? ! ? ! ?

— சேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்
கே. என். எம்.
மீரூன் சாஹிப்
— தங்கப்பவுண் நகைமாளிகை —
கன்னதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.
K. N. M. Meeran Sahib
JEWELLERS & DIAMOND MERCHANT
— SOVEREIGN PALACE —
Kannathiddy, Dial: 585 JAFFNA.

திருக்குறள்
இலங்கைக்கு முதன்முதலாக நீல சோப்பை
அறிமுகப்படுத்தியவர்கள்
மில்க்வைற் ஸ்தாபனத்தாரே.
1-7-72 தொடக்கம்
மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில்
திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றது.
மேலுறைகளைச் சேகரித்து,
பரிசுத் திட்டத்தில் பங்குபற்றுங்கள்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
தபாற் பெட்டி இல. 77
யாழ்ப்பாணம்.

இப் பிரசுரம், சக்தி அச்சகத்தினருக்காக, யாழ். ஸ்ரான்லி வீதியி லுள்ள சக்தி அச்சகத்தில், பொன். இராசரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org